# சங்கமி

பெண்கள் சங்கத்தின் பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமி

## பெண்கள் சங்கத்தின் பாட்டு

25
சூரியா

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
55, லேடி மனிங் ட்ரைவ், மட்டக்களப்பு, இலங்கை.
94 (0) 65 222 3297
94 (0) 65 222 4657 (Fax)
www.suriyawomen.org
suriyaw@slt.lk

ISBN 978-955-8695-11-1
முதல் பதிப்பு - ஐப்பசி 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

பெண்களின் கதைகளும், பெண்களின் வரலாறுகளும் பெரும்பாலும் கிராமங்களுக்குள்ளேயே தேங்கிக் கிடக்கின்றன. இன்று நாம் பேசும் உரிமைகளும், பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்களும், எமது நவ நாகரிக வளர்ச்சிகளும், ஒற்றுமை, சமாதானம், கூட்டுறவு போன்ற பதங்களும் கிராமங்களில் வாழ்ந்த பெண்களின் வாழ்வியலில் இருந்தே தோற்றம் பெற்றவையாகும். ஆகவே மானுட வாழ்வின் ஆதாரம் ஆரம்பம் கிராமங்கள் ஆகும்.

இத்தகைய புரிதலுடன்தான் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் பெண்களின் சுய வளர்ச்சி, அபிவிருத்தி ஆகியவை பற்றிச் சிந்தித்துத் செயற்படத் தொடங்கியது. மட்டக்களப்பில் ஊர் ஊராகச் சென்று பெண்களுடன் இருந்து அவர்களை ஒன்றாக்கி கலந்துரையாடி அவர்கள் விரும்பிய பெயர்களில் சங்கம் அமைத்து அவர்கள் வாழும் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்ததும் செய்து கொண்டிருப்பதும் சூரியாவின் வரலாற்றில் மறக்க முடியாததும் இன்றுவரை தொடரும் கதையாகவும் உள்ளது.

எமது இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி இப் பெண்களின் கடந்த கால அனுபவங்களையும் எமக்கான படிப்பினைகளையும் அவர்களிடம் இருந்து பெறுவதற்காய் இலங்கேஸ்வரி, சரளா ஆகிய நன்பிகளுடன் நாம் பழைய சங்கங்களை நாடிச் சென்றபோது, அவர்கள் தமது சங்கம் எப்படி தோற்றம் பெற்றது, தாம் என்ன என்ன நடவடிக்கை எடுத்தோம், கிராமத்தில் இருந்து வந்த எதிர்ப்புக்கள், குழந்தைகள் உட்பட வயதானவர்களும் வழங்கிய ஒத்துழைப்பு, பெண்களான தமது செயற்பாட்டை புரியாமலும் ஆச்சரியமாகவும் பார்த்த தமது ஊராரை தாம் எவ்வாறு கையாண்டோம் எனும் சம்பவங்களையும் மிகவும் ஆபத்தான நேரங்களில் எப்படி தாம் பயந்தோம் பாதுகாத்தோம் என்பதையும் தற்போது சிரித்தபடி சந்தோசமாகவும், மிகவும் விருப்புடனும் இப்பொழுதுதான் நடந்ததுபோல் ஒன்று விடாமல் பசுமையாய் பகிர்ந்து கொண்டதற்கு மனதார எமது நன்றியினை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் சங்கங்களது கதைகளை எமது பாரம்பரிய இசை வடிவமான "வில்லிசை" யால் தருகின்றோம் இது எமது புதிய சங்கங்களின் வளர்ச்சிக்கு உற்ற துணையாய் அமையும் என்ற நம்பிக்கையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லிசை பாட ஆமா வில்லிசை பாட
வரம் தந்தருள்வாய் ஆதித் தா... யே... (௨)

சொல்லெடுத்து வில்லிசையினில்
கதைகள் கூற நாமும் கதைகள் கூற
வரம் தந்தருள்வாய் ஆதித்தாயே...

**அக்கா** பெரியோர்களே

**தோழிகள்** ஆமா ...

**அக்கா** சிறியோர்களே

**தோழிகள்** ஆமாம் ஆமாம்

**அக்கா** இங்கு வருகை தந்திருக்கும் என் இனிய சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் எங்களது இனிய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தோழிகள்** அனைவருக்கும் வணக்கம்

அனைவருக்கும் வணக்கம் வணக்கம்.

அக்கா இங்க வந்திருக்கிறவங்க எல்லாம் எங்க இருந்து வந்திருக்காங்க...



**தோழி** அக்கா நாம எல்லாரும் இங்க கூடியிருக்கிற காரணத்தையும் இவங்க எல்லாம் ஆர் ஆர் என்டும் ஒருக்கா சொல்லுங்களன்...

**தோழி 2** தொடங்கிட்டியா சரி இனி விளங்கின மாதிரித்தான்.

**அக்கா** சரி சரி அமைதியா இருங்க. இருந்தாலும் இங்க வந்திருப்பவங்கள விட உங்களுக்கு இருக்கும் ஆர்வத்தை பார்க்கும்போதுதான் கொஞ்சம் வியப்பா இருக்கு.

**தோழி 4** ஓம் அக்கா எனக்கும் அதே பீலிங்தான் (Feeling).
இவங்க.. முறக்கொட்டான்சேனை, நாவற்குடா, குமாரபுரம். காங்கேயனோடை, பூநொச்சிமுனை, கிரான்குளம், இருதயபுரம் இப்பிடி எல்லா சங்கங்களிலும் இருந்து வந்திருக்காங்க. சரிதானே...

**தோழி 1** அது சரி அக்கா; இண்டைக்கு இவங்க எல்லாரும் ஏனாம் வந்திருக்காங்க எண்டு ஒருக்கா சொல்லுங்களன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா — நாம இன்றைக்கு பெண்கள் சங்கங்கள் ஏன்
உருவாச்சு, எப்படி ஒன்றாகச் சேந்தாங்க,
எப்படி இண்டைக்கு வரைக்கும் வெளி
ஆக்களோட தொடர்பில இருக்காங்க
இதன் முக்கியத்துவம் என்ன என்றத
பத்தித்தான் கதைக்கப் போறம்.

தோழி 1 — அட ஜஸ்டு மிஸ் (*Just Missed*) அக்கா

தோழி 2 — ஆ...

தோழி 1 — இத இதப் பற்றித்தான் சொல்லுங்க
என்று சொல்ல நினைச்சன் நீங்களே
சொல்லித்தீங்களே..

தோழி 2 — சா... அறிவுச் சுடரே
நீங்க சொல்லுங்க அக்கா.

அக்கா — அதாவது அந்தக்காலத்தில தொடங்கி
இன்றைக்கு வரைக்கும் நம்மட சமூகம்...
எல்லாத்திலயும் ஆம்பிளயளுக்கு மாத்திரம்
முக்கியத்துவம் கொடுத்து வருதுதானே...

தோழி 1 — ஓம் ஓம் பொம்பிளயள மட்டும்
ஒதுக்கி வைச்சிருக்காங்க...

அக்கா — ஆனா உங்களுக்கெல்லாம் உண்ம என்ன
எண்டு தெரியுமா?

ஆதி சமூகம் பெண்ணால் தானே
உயிராச்சு

அவள் திறமையினால் எங்கும் அது
நிலையாச்சு - 2

ஆண் மனிதன் நெஞ்சில் வஞ்சம்
உருவாச்சு - 2

பெண் உரிமை எல்லாம் அவன் வசமே
பறிபோச்சு - 2

ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையாக்கி

இருவருமே சேர்ந்து ஒரு
சிசுவாக்கி - 2

பெண்ணை மட்டும் சமூகத்தில
பிரிவாக்கி - 2

ஆணாதிக்க கட்டமைப்பு உருவாச்சு

ஆண் ஆதிக்க கட்டமைப்பு உருவாச்சு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா	இப்படி பெண்களால் உயிர்
கொடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட
நம்மட சமூகத்த தங்கட கைக்குள்ள
கொண்டு வர நினைத்த மனிதன்
தனது அதிகாரத்திற்குள் சமூக
கட்டமைப்புக்களை நிலை
நிறுத்தியமையினாலேயே இப்படி
எல்லாம் செய்தாங்க.
இன்னும் செய்து கொண்டு
இருக்கிறாங்க.

தோழி 1	அட அட என்ன ஒரு விளக்கம்.
இதவிட ஒரு விளக்கம் இல்லவே இல்ல

தோழி 4	அக்கா எனக்கொரு சந்தேகம்
இப்படியான ஆம்பிளைகளிட
அதிகாரத்துக்குள்ள இருந்து மீண்டு
வர நம்மட பெண்கள் என்ன என்ன
செய்தாங்க அக்கா

தந்தனத் தானன தானானா தனத் தான
தந்தனத் தனனான


பால்நிலை சமத்துவம் இன்மையினால்
பெண்கள் பெரும் துன்பங்கள் பெற்றனரே

பெண் உரிமைகள் மீறப்பட்டு அவள்
மூலையில் ஒதுங்கிக் கிடந்தனரே

பெண் புறம் தள்ளுதல் தாங்காமல்
அதை தாங்கிக் கொள்ளவும் இயலாமல்

சமூகத்துப் பெண்களை வலுவூட்ட நல்ல
சங்கங்கள் இங்கு உருவாச்சே

நல்ல சங்கங்கள் இங்கு உருவாச்சே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா — இப்பிடி அதிகாரத்தால ஒடுக்கப்பட்ட
பெண்கள வெளிக் கொண்டு வந்துதான்
நம்மட சமூகத்தில் பெண்கள்
சங்கங்கள் உருவாக்கப்பட்டது.

தோழி 1 — எது? சங்கமா? ஓம் ஓம் எனக்கும்
தெரியும் இந்த வருத்தப்படாத
வாலிபர் சங்கம் வருத்தப்படாத
வாலிபர் சங்கம் என்று சால்லுவாங்களே
அதுதானே அக்கா

தோழி 2 — ஐயோ ஐயோ... வெட்டித்தனமா
ஊர் சுத்துற உனக்கு இப்படி சினிமா
சங்கங்களப் பத்திதான் தெரியும்

தோழி 3 — பாருங்க அக்கா இது இரண்டும்
உருப்படியா ஏதாச்சும் சொல்லுதா...
நீங்க சொல்லுங்க அக்கா நம்மட
பெண்கள் சங்கங்கள் பற்றியும் அது ஏன்
உருவாச்சு எண்டும்

யுத்தம் நடந்ததினால்
இடப் பெயர்வு வந்ததுடன்

வீட்டு வன்முறை கூடியாச்சே

சமய விழுமியங்கள் கலாச்சாரப்
பெயர்களுடன்

பெண்களைத் தான் முடக்கியாச்சே

பொறுத்திருத்தல் ஆகாதென்று
பெண்களும்தான்

கூடி நின்று கேள்வி கேட்க
சங்கமொன்று உருவாச்சே

முஸ்லிம் தமிழ் பெண்களும்தான்
ஒற்றுமையாய்

சேர்ந்து நின்று செயற்பாடுகள்
தனில் எங்கும் இறங்கியாச்சே.

எப்படி எப்படி ?

இப்படி இப்படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா

இப்படி யுத்தம், இடப் பெயர்வு,
வீட்டு வன்முறை கலாச்சார
கட்டுப்பாடுகள் என்பவற்றால்
ஏற்பட்ட பாதிப்புக்களின்
பின்னனியில் அவற்றுக்கு எதிராக
குரல் கொடுக்கவென்றும் பெண்கள்
உரிமைகள் தொடர்பில் செயற்பாடுகளை
மேற்கொள்ளவும் பெண்கள் ஒன்றாக
சேர்ந்து கிராமங்கள் தோறும்
உருவாக்கப்பட்ட
பெண்கள் குழுக்கள்தான்...
பெண்கள் சங்கங்கள்... ஆகும்.

தோழி 3

ஓம் அக்கா ஓம்.
இந்த சூரியா அக்காமார் எல்லாம்
இந்த சங்கங்கள உருவாக்க நிறைய
உழைச்சியிருக்காங்க என்றும்
ஒத்துழைப்பு தந்திருக்காங்க என்றும்
கேள்விப்பட்டன் அக்கா.
அவங்க மட்டும் இல்ல இந்தா
இங்க வந்திருக்கிறவங்களில கூட
எத்தினயோ பேர் இந்த விசயத்திற்காக
எவ்வளவு அர்ப்பணிப்போட
வேல செஞ்சிருக்காங்க தெரியுமா?

அக்கா

அது மட்டும் இல்ல மற்ற சங்கங்கள்
மாதிரி இல்லாம இந்தப் பெண்கள்
சங்கத்தில பெண்கள் தங்கட முடிவ
தாங்களே அரியண்டம் இல்லாம
எடுக்க ஊக்குவிக்கப்பட்டாங்க

தோழி 1

அக்கா அக்கா
முறக்கொட்டாஞ்சேனை என்று
அங்கே இருந்ததாம் இப்படி
சங்கமும் ஒன்று
முறக்கெட்டாஞ் சேனையூர் என்று.

தோழி 2

அக்கா அக்கா... இவ்வளவு நேரமும்
இவ நல்லாத்தானே இருந்தா

தோழி 1

பாருங்க அக்கா நான் கேள்விப்பட்ட
முறக்கெட்டாஞ்சேனை சங்கத்தை பற்றி
சொல்ல வந்தா...?

அக்கா

சரி சரி நான் சொல்றன்.
1995 இல் பெண்கள் ஒரு குழுவாகி
வீடு வீடாகப் போய் ஆக்களச் சேத்து
கிராம சேவகரிட அனுமதியோட
1996 ஆம் ஆண்டில சங்கமா பதிவு
செய்தாங்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோழி 4** ஓம் அக்கா எனக்கும் இதப்பற்றி
நீங்க சொல்லி இருக்கீங்க.
ஊரில இருக்கிற எல்லாப் பெண்களும்
சேர்ந்து கூட்டங்கள் கூடுறதும்
நிகழ்ச்சிகள் செய்யிறதும் பங்கு
பற்றுரதும் மட்டுமல்லாம நாடகம்
நடித்து வந்த வருமானத்தில
சேமிப்பும் செய்தாங்களாமே...
எவ்வளவு பெரிய விசியம்
அக்கா அது.

**தோழி 3** அடிப்போடி இது என்ன பெரிய விசயம்
அங்க இதவிடப் பெரிய விசயம்
எல்லாம் செய்திருக்காங்க

**தோழி 1** என்ன பெரிய விசயம்
ஒருக்கா சொல்லுங்க பாப்பம்

அக்கா உங்களுக்கெல்லாம் நடந்த
யுத்தம் பற்றி தெரியும் தானே...
அந்த நெருக்கடியான காலத்திலயும்
ஆமி நடமாட்டமும்
யுத்த வன்முறைகளும் ஏன்
வீட்டு வன்முறைகளும்
கூட குவிஞ்சு போய் கிடந்த
முறக்கொட்டாஞ்சேனையில
பெண்கள் தங்களுக்கேற்பட்ட
வன்முறைகள தைரியமா
ஆனா நுணுக்கமா அணுகி
தீர்க்கிற வழிய பாத்தாங்க.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி 3 அது மட்டுமா...
ஆம்பிள வேல, பொம்பள வேல என்று
பிரிச்சு வச்ச வேலைகள,
இப்படி பிரிக்க வேணாம்
எல்லாரும் எல்லா வேலையும்
செய்யலாம் என்றும் காட்டினாங்க...

தோழி 1 ஆ

தோழி 2 வாய பிளக்காத. அது எப்படி என்றா...
விளையாட்டுக்கூடாகவே வாழ்க்கய
புரிய வைச்சமுறதான் அது.



தோழி 04 ஓம் ஓம் ஞாபகம் வருது,
ஐயாமாருக்கும் அண்ணாமாருக்கும்
தேங்காய் துருவுர போட்டி வச்சது...
தோணி ஓட்டம் பெண்களுக்கு வச்சது....
சும்மாயில்ல ஊரே திரண்டு
கை கொட்டி ரசிச்சது... அது மட்டுமா
பெண்களால எழுதப்பட்டு பெண்களே
மேடை ஏறி ஆடின கூத்து.
அதச் சொல்லி வேலையில்ல...

தோழி 03 ஓம் ஓம் அந்த தொங்கலில
ஆண் பெண் சமத்துவ
விளையாட்டுக்கள்.
இந்த தொங்கலில இன ஒற்றுமைக்காக
சங்கமி சங்கம்.

தோழி 1 எது சங்கமியா? ஐ சனலில போட்ட
சைனிஸ் ரீவி நாடகந்தானே...

தோழி 2 அடியே உனக்கு ரீவியில என்ன நிகழ்ச்சி
போகுது எண்டு மட்டும் தான் தெரியும்.
ஊருக்குள்ள என்ன நல்ல விசியம்
இருக்கு என்டும் தெரியுமா?

தோழி 1 சரி பின்ன அந்த நல்ல விசயத்தை
சொல்லு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா — இனங்களுக்குள்ள முரண்பாடான
எண்ணங்கள் தோன்றாம அனைவரும்
மதிப்புள்ள மனிதர்களா வாழணும்..
என்றுதான் காங்கேயநோடை
காத்தான்குடி எல்லைக் கிராமத்தில
இருக்கிற தமிழ் முஸ்லிம் பெண்களால
இந்த சங்கம் உருவாக்கப்பட்டது.

தோழி 4 — அது மட்டுமா?
பூநொச்சிமுனையில எங்கட சங்கம்.
அதிலயும் எங்களுக்கு பெண்கள்
சிறுவர்கள் தொடர்பான உரிமைகள்
பற்றி தெரிய வந்ததோட பாய் இழைக்க
சொல்லிக் கொடுத்ததுக்கு வந்த
டீச்சர் என்ட பெயரும் இண்டைக்கு
வரைக்கும் நிலைச்சிருக்கு

தோழி 2 — எங்கட சங்க உறுப்பினர்
குழந்தையம்மா... எங்கட
பூநொச்சுமுனை சங்கத்த ஆரம்பிக்க
அவ எடுத்த முயற்சிகள்
எப்பவும் எங்களால மறக்கேலா.
எங்களயெல்லாம் சூரியாவில நடக்கிற
நிகழ்சிக்கு கூட்டி வாறது...
இப்ப அவ எங்கள விட்டுப் போயித்தா...
ஆனா அவவின்ர மகள் வாறா...
அந்தா அந்தா இருக்கிறா

தோழி 03 — ஓம் ஓம் சங்கத்தில இருந்துதான்
முதன் முதலா ரவுணுக்கு *(town)*
வந்தன், அப்ப றோட்ட குறோஸ் *(cross)*
பண்ணக்குள்ள வசந்தி அக்காட
சட்டய பிடிச்சித்து கடந்தது
என்னால மறக்கவே ஏலா.

தோழி 2 — அது மாதிரி காசே இல்லாம
நாவற்குடாவில கட்டிடம் எப்படி
கட்டின என்டு அம்மா சொன்ன கதய
மறக்கவே ஏலா...

தோழி 1 — பிளீஸ் சொல்லன்...

தோழி 2 — ஊருக்குள்ள கம்பு தெண்டி...
ஓலை மட்ட தெண்டி....
கயிறு தெண்டி...

தோழி 1 — நொண்டாம சொல்லு...

தோழி 2 — பெண்களே மடு தோண்டி...
சின்ன பிள்ளைகள மேல ஏத்தி
விளக்கில எண்ண ஊத்தி ஊத்தி
இரவிரவா கட்டினாங்களாம் பெண்கள்,
சங்கக் கட்டிடம் ஓலையால.

தோழி 3 — ஆ... இப்ப நான் கட்டாயம் சொல்லணும்
குமாரபுரப் பெண்களின்ர
கெட்டித் தனத்தயும் சுட்டித்தனத்தயும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தோழி 1 | தொடங்கு... பாமா... தொடங்கு... |
| தோழி 3 | ஊருக்கும் றோட் இல்ல...<br>எங்க வீட்டுக்கும் கரண்ட் இல்ல<br>பிள்ளைக்குப் பதிவில்ல<br>அது புருசனுக்கு புரியல.... |
| தோழி 4 | ஓம் ஓம் இதெயெல்லாம் தேடி<br>நாங்க ஓடினோம் பாரு |
| தோழி 1 | ஓடினோம் ஓடினோம் ஓடினோம்<br>மாநகர சபையின் எல்லைக்கே<br>ஓடினோம். |
| தோழி 3 | திரும்பினோம்<br>திரும்பினோம்<br>திரும்பினோம் |
| தோழி 2 | நிப்பாட்டு ஓடினாத் திரும்பத்தானே<br>வேணும், |
| தோழி 3 | ஆனா நாங்க சும்மா திரும்பல்ல |
| தோழி 1 | பின்ன |
| அக்கா | றோட்டைக் கண்டோம்.<br>றோட்டின் அருகே கட்டடம் கண்டோம்.<br>பதிவைக் கண்டோம் பாலர் படிக்க<br>பாலர் பாடசாலை கண்டோம்.<br>கண்டோம் கண்டோம்...<br>ஒற்றுமை கண்டோம் இறந்த வீட்டிலும்<br>இழந்த உறவுக்காய் ஒன்றாய் இருக்கக்<br>கண்டோம் கண்டோம்... |
| தோழி 2 | ஓம் ஓம் சங்கத்தின் பேரால நாங்க<br>சமைச்சுக் கொடுப்பம், உறுப்பினர்கள்<br>நாங்க எட்டு வரைக்கும் வீட்டாக்களோட<br>சேந்து கண் முழிப்பம். |
| தோழி 1 | சரி, இப்படியான சங்கப் பெண்களுக்கு<br>கணவன்மாரால அவங்கட குடிப்<br>பழக்கத்தால ஊர் ஆக்களால எல்லாம்<br>பிரச்சனைகள் எதுவுமே வரலையா அக்கா |
| தோழி 4 | அட நீயும் கேள்வி சரியா கேக்குறா<br>என? கட்டாயம் வந்துதான் இருக்கும்.<br>முறக்கொட்டாஞ்சேனையில பயிற்சி<br>நடந்து கொண்டிருந்த நேரமே<br>அண்ணன்மார் அடிக்க வந்திருக்காங்க.<br>அது மட்டும் இல்ல ஒரு அம்மாட புருசன்<br>றெயினிங் நடந்த நேரம் குடிச்சிப்போட்டு<br>அவய தேடிப்போயே அடிச்சிருக்காரு<br>தெரியுமா? |
| தோழி 1 | இப்படி குடிச்சு வீனாப்போற<br>அண்ணன்மாருக்கு என்னக்கா<br>சொல்லலாம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சாராயத்த குடிச்சு வரும் அண்ணனாரே
நீங்க கத்தி கூச்சல் போடுவதேன் அண்ணனாரே
உழைச்ச காச குடிப்பதுமேன் அண்ணனாரே
உங்க உடம்ப நீங்க கெடுப்பதுமேன் அண்ணனாரே

படித்த மனிதர் என்னும் பெயரில் அண்ணனாரே
உங்க ஊருக்குள்ள பதுங்கியிருக்கும் அண்ணனாரே
மௌனமாக இருந்து கொண்டு அண்ணனாரே
உங்க மனைவியை நீர் அடிப்பதுமேன் அண்ணனாரே

கஸ்டப்பட்டு வேலை செய்த அண்ணனாரே
அந்த காச வீணாய் கரைப்பதுமேன் அண்ணனாரே
பிள்ளை நன்றாய் படிக்க வேணும் அண்ணனாரே
இதை புரிந்து கொண்டு நடக்க வேணும் அண்ணனாரே

**தோழி** இப்படி குடித்து விட்டு சண்டை போடும்
அண்ணன்மார்களுக்கு புரியும்படி
நம்மட சமூக நிலை, தேவைப்பாடு,
உடல் நலம், எதிர் காலம் பற்றி புரிய
வச்சதோட அவர்களின் பங்களிப்பையும்
வளரச் செய்தமைதான் இந்த
சங்கங்களோட பெரும் வெற்றி சரிதானே?

**தோழி 2** ஆமா ஒவ்வொரு வருசமும் சூரியாவால
கொண்டாடப்பட்டு வாற
ஐ டபிளியு டி (*IWD*)
டவிளியு சி டி எம் (*WCDM*) ஆல் வந்து
செய்த வவ் டே (*VAW day*) எல்லாத்திலயும்
இந்த விசயத்த சொன்னாங்கதானே அக்கா?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி 1 என்ன அக்கா சொல்றாள் இவள் -
என்னவோ ஏவிசிடி (*ABCD*)
என்டெல்லாம்.

தோழி 2 இது தெரியாதா...
ஊருக்கே தெரியும் - ஐ டவிளியு டி (*IWD*)
எண்டா மகளிர் தினமெண்டும்...



தோழி 3 காணும் நிப்பாட்டு இப்ப
சின்னப் பிள்ளைக்கும் இது தெரியும்.
தெரியாட்டி போய்
தெரிஞ்சுக்கோ.

அக்கா இந்த சங்கத்தாலதான் இந்த சமத்துவம்,
ஐ டவிளியு டி (*IWD*)
ஜென்டர், கெற்றுகெதர்,
வலுப்படுத்தல் இப்படியெல்லாம்
கேள்விப்பட்டன்.

தோழி 1 என்டாலும்....
றோட்டில ஆடித்திரியிறாளுகள்,
குடும்பத்த கலைக்கிறாளுகள்,
இதுகள எவன் கட்டப் போறான்...
எண்டும் வந்திருக்குதானே

அக்கா நீ சொல்லுறதும் சரிதான் தங்கட
கட்டுப்பாட்டுக்குள்ள வச்சிருக்கிற
விசயங்கள விட்டு நாம வெளில
வரக்குள்ள கட்டுப்பாடு வைச்சாக்களின்ர
இயலாமையின் வெளிப்பாடுதான் அது.
மற்றப்படி இதில உண்மை
எதுவும் இல்லை.

தோழி 3 சரியா சொன்னீங்க அக்கா அண்டைக்கு
அத்தனை பேச்சுக்கும் மத்தியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மட அம்மாமாரும் சகோதரிமாரும்
முன்னெடுத்த விடயங்களதான்
இண்டைக்கு எல்லாரும்
கொண்டாடி வாறாங்க.

தோழி
இண்டைக்கு பெண்கள் தினத்த,
கம்பனிகள், பிரதேச செயலகங்கள்,
கச்சேரி, மாநகரசபை, காணாமல்
போனோரை கண்டறியும்
ஆணைக்குழுவும்கூட கொண்டாடுவதும்
இதுக்கு நம்மள கூப்பிடுவதும்
பெண்களின் உழைப்புக்கு கிடைச்ச
வெற்றி எண்டுதான் சொல்லுவன்.

தோழி 1
இதனாலதான் அக்கா நானும் புதுசா
ஒரு பெண்கள் சங்கத்த உருவாக்கி
முன் மாதிரியா நடக்கலாம் என்று
ஆசப்படுறன்.

தோழி 2
அப்பாடா இப்பத்தான் உருப்படியா ஒரு
விசியம் சொல்லியிருக்கா. அக்கா ஒரு
குழு எண்டா, பெண்கள் சங்கம் எண்டா
எப்படி இருக்கணும் எண்டு ஒருக்கா
சொல்லுங்களன்

"நண்டு கூடு இழைக்கும் எங்கள்
நாவற்குடா பெண்கள் சங்கம்
சூரியாவை கேட்டது போல்
கேட்டுக் கொள்வோமே

பெண் வளத்தை மட்டும் இங்கு
நம்பிக்கையாய் வைத்துக் கொண்டு
ஆசையுடன் எல்லோருக்கும்
சேவை செய்வோமே

எத்தனை இடர்கள் எம்மை
நோக்கியே வந்த போதும்
நம்முரிமை நாமுணர்ந்து
செயற்பட துணிந்து விட்டால்

தோல்வி என்பது ஒரு துளியுமிங்கில்லை
தொடர்ந்து செல்லவே ஒரு தடையும்
நமக்கில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி 1 பாட்ட கேக்க கேக்க கிக்கு ஏறுது அக்கா

தோழி 2 கவனம் மட்டய போட்டிராத
வந்திருக்கிறவங்களும் போகணும்
நாமளும் போகனும் நீங்க சொல்லுங்க
அக்கா

அக்கா இப்படி இதுவரை இயங்கிய இன்று
வரை இயங்கிக் கொண்டு இருக்கின்ற
சங்கங்களின் மூலம் சமூக கலாச்சார
கருத்துக்கள் தளர்த்தப்பட்டதுடன்,
பெண்கள் தலமை தாங்கும் குடும்பங்கள்
முன்னேற்றமடைவதற்கான தளங்களும்
அமைத்துக் கொடுக்கப்பட்டன.

தோழி 4 அது மட்டுமா அரசியல் செயற்பாடுகளில்
ஈடுபடுவதற்கும் ஆர்வம் காட்டினார்கள்.
தங்களுடைய தலைமைத்துவத்தை
தாங்களே எடுத்துக் கொண்டார்கள்
நிறையப் பயிற்சியில் பங்கு பற்றினார்கள்.

குரல் சின்ன சின்ன பயிற்சி
சமத்துவப் பயிற்சி
வன்முறைகள் வந்தால்
தடுத்து நிற்கப் பயிற்சி
பெண்களின் உழைப்பின்
மேன்மை பற்றிப் பயிற்சி
எங்களது காலில் நாங்கள்
நிற்கப் பயிற்சி

தோழி 3 சுனாமி நேரம் கூட நம்மட சகோதரிகள்
கொஞ்சமும் தளராம எல்லாரும் சேர்ந்து
எத்தனையோ வேலைகளச்
செய்திருக்காங்க என அக்கா.

தோழி 2 ஆனாலும் அது சிம்பிள் வேல இல்ல.
அதுல பல உள்ளூர் அரசியல் வாதிகளிட
தலையீடுகளும் கூட இருந்தது தெரியுமா?

அக்கா அந்தக் காலப்பகுதிக்குள்ள எத்தனையோ
சவால்களுக்கு முகம் கொடுத்திருக்கம்.
ஆனா இண்டைக்கு வரைக்கும்
அது தொடர்ந்து கொண்டுதான்
இருக்கு. அதிலயும் பெண்களுடைய
வாழ்வாதாரத்துக்கு எதிரான
சவால் இருக்கே...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி 4 ஓம் அக்கா ஓம் அதுல ஒண்டுதான் பூநொச்சிமுனையில காலம் காலமா பெண்கள் மேற்கொண்டு வந்த பன்பயிர் தொழில். அவங்க பன்பயிர் செஞ்ச காணிக்குள்ளால வடிகால் வெட்டி பெண்கள் பயிர் செய்த நிலத்தப் பறிச்சது.

தோழி 3 ஏன் நாவக்குடாவில நண்டுக்கூடு பின்னப் பயன்படுத்தின ஈச்ச மரத்தையெல்லாம் பத்த வச்சது.

தோழி 1 அது மட்டுமா தாழங்குடாவில பன மரத்தையெல்லாம் தறிச்சது ம்.... மயிலம்பாவெளியில பிரப்பம் பத்தையெல்லாம் அழிச்சு வாரது...

தோழி 2 நிப்பாட்டு நெஞ்சு நோகுது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்கா**

அட சவால்கள் வந்து கொண்டுதான்
இருக்கும் இதையெல்லாம்
எதிர்கொள்ள நாம பழகிக்
கொள்ளனும்.
அது மட்டும் இல்ல தோல்வி
நிலையெண்டு நினச்சி ஒரு நாளும்
நாம துவண்டு போகக்கூடாது

ஒரு முயற்சி செய்தா அது வெற்றியா
முடியும் வரைக்கும் தொடர்ந்து செய்ய
வேணும் அப்பதான் அது எங்களுக்கும்
எங்களால மற்றவங்களுக்கும்
நன்மய கொண்டு வரும்.
இதுதான் எங்கட
பெண்கள் சங்கங்களில
இருந்து நாங்க படிச்ச பாடம்

**தோழி**


அக்கா கேட்க கேட்க கேட்டுக்
கொண்டே இருக்கனும்
போல இருக்கு.
ஆனா நாமளும் போகணும் மற்ற
எல்லாரும் போக வேணும் அதனால...

**அனைவரும்**

விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டு
கேட்டிருந்து ரசிச்சவங்க எல்லோருக்கும்
வணக்கம்
எங்கள மதிச்சவங்க எல்லோருக்கும்
வணக்கம்.
பெண்கள் சங்கம் உருவாக்கி
பெண்ணிலைவாதம் நிலை நாட்ட
உழைச்சவங்க எல்லோருக்கும் வணக்கம்
எங்கள ஊக்குவித்த அனைவருக்கும்
வணக்கம்
வணக்கம் வணக்கம்.

நன்றி

●●●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆசிரியர்கள் | ஜெயதீபா பத்மஸ்ரீ, விஜயலட்சுமி சேகர் |
| அட்டைபடம் | ஆவணக்காப்பகம்,<br>சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் |
| ஓவியங்களும், வடிவமைப்பும் | வேலாயுதன் ஜெயசித்ரா |
| அச்சகம் | குளோப் பிரின்டிங் வெர்க்ஸ் |
| அனுசரணை | FOKUS<br>FORUM FOR WOMEN AND DEVELOPMENT |


25
சூரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sithol Printing Works - No. 5, Stork Place, Colombo 10. Tel: 0777-315971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org